தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-1-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஜனவரி 2015 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

ஜனவரி 2015 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள் குறித்து பயிர்ப் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அறிக்கை.

**நெற்பயிர்**

கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், திருவள்ளூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் நெல் பயிரில் இலைச் சுருட்டுப்புழு, புகையான் மற்றும் தண்டுப்புழுவின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த வயல்களில் விளக்குப் பொறி ஏக்கருக்கு 1 அமைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக காணப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் 25 கிலோ எக்டருக்கு அல்லது புரோபினோபாஸ் 50 இ.சி 1000 மில்லி அல்லது பாசலோன் 35 இ.சி 1500 மில்லி எக்டருக்கு தெளிக்கவும்.

நெல்லில் குலை நோய், இலைப்புள்ளி மற்றும் லஷ்மி நோயின் தாக்குதல் கோயம்புத்தூர், ஈரோடு, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பரவலாகத் தென்படுகிறது. விவசாயிகள் தேவைப்பட்டால் மான்கோசோப் (2 கிராம் 1 லிட்டர் தண்ணிருக்கு) தேவைக்கு ஏற்ப 2 அல்லது 3 முறை 10-15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.

பாக்டீரியா இலைகருகல் நோய் நாகப்பட்டினம், காஞ்சிபுரம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த தேவைப்பட்டால் காப்பர் ஹைராக்ஸைடு 1.25 கிலோ / எக்டர் (2.5 கிராம் ஒரு லிட்டர்) தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.

## பருத்தி

காய் புழுவின் தாக்குதல் தேனி, தர்மபுரி, திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு 5 வைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். அதிகம் சேதம் உள்ள பயிர்களில் குளோர்பைரிபாஸ் 20 இ.சி – 2 லிட்டர் அல்லது பாசலோன் 35 இ.சி – 1.5 லிட்டர் ஒரு எக்டருக்கு தெளிக்க வேண்டும்.

பருத்தி செடியில் சாறு உறிஞ்சும் தத்துப் பூச்சிகளின் தாக்கம் ஈரோடு, சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்படுகிறது. விவசாயிகள் இவற்றின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் தேவைப்படின் (500 லிட்டர் தண்ணிர் ஒரு ஏக்டருக்கு) மிதைல் டிமட்டான் 25 இ.சி. 500 மில்லி அல்லது இமிடோகுளோபிரிட் 200 எஸ்.எல் 100 மில்லி ஒரு எக்டருக்கு தெளிக்கவும்.

## நிலக்கடலை

நிலக்கடலை பயிரில் கோயம்புத்தூர், தர்மபுரி, சேலம், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இலைச்சுருட்டுப்புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒரு விளக்குப்பொறி வைத்து அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் தெளிக்கவும்.

கடலையில் டிக்கா இலைப்புள்ளி நோய் தர்மபுரி, திண்டிவனம், மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த கார்பன்டாசிம் (1 கிராம் / லிட்டர்) அல்லது மான்கோசாப் (2 கிராம் / லிட்டர்) அல்லது குளோர்தலானில் (2 கிராம் / லிட்டர்) தண்ணீரில் தெளிக்கவும்.

## தோட்டக்கலை பயிர்கள்

சாறு உறுஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் வெண்டை, கத்தரி, தக்காளி, மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிர்களில் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றை கண்காணிக்க மஞ்சள் ஒட்டும் பொறி 5 / ஏக்கர் வைக்கவும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் தெளிக்கவும் மற்றும் இயற்கை எதிரிகளை உபயோகப்படுத்தவும்.

## தகவல்

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

மக்கள் தொடர்பு அலுவலர்